## மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

## அசல் வழக்கு எண்.249/2023

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22 ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அமலா | கணவர் பெயர் | : | கோபிநாத் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 22.07.2025

**P.W. : 1**

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

நான் வாதி ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். 02.12.2022 அன்று எனது அக்கா அருள்மொழிதேவி எழுதிக் கொடுத்த பதிவு செய்யாத அதிகார பத்திரத்தின் அசல் **வாசாஆ.1** ஆகும். 18.05.1981 தேதியில் சந்திரிகா பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் **வாசாஆ.2** ஆகும்.

19.05.1981 தேதியில் சந்திரிகா பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் **வாசாஆ.3** ஆகும். 19.05.1981 தேதியில் சந்திரிகா பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் **வாசாஆ.4** ஆகும். 30.05.1981 தேதியில் சந்திரிகா பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் **வாசாஆ.5** ஆகும். 04.12.2002 தேதியில் கணேசன் பெயரில் மாணிக்கவேல் மற்றும் அருள்மொழி எழுதிக் கொடுத்த பதிவு செய்த பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ.6** ஆகும். 29.12.2022 தேதியில் வாதி சார்பாக பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிவிப்பின் அலுவலக நகல் **வாசாஆ.7** ஆகும். அதை அவர் பெற்றுக் கொண்டதற்கான இரண்டு அஞ்சல ஒப்புதல் அட்டைகள் **வாசாஆ.8 வரிசை** ஆகும். 2 ஆம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் 17.01.2023 அன்று அனுப்பிய பதில் அறிவிப்பு **வாசாஆ.9** ஆகும்.

**(வேண்டுகோளின்படி முதல்விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.